# <u>JUDICIAL MAGISTRATE COURT NO.II CHENGALPATTU</u>

## <u>CC No. 96/2017</u>

## <u>DEPOSITION OF WITNESS</u>
## <u>(Chapter XXIII Code of Criminal Procedure)</u>

| | |
|---|---|
| IN THE COURT OF | : JUDICIAL MAGISTRATE NO.II CHENGALPATTU. |
| Deposition of witness for | : Lw14 /Pw3 |
| Name | : Kamaraj |
| Father/Husband's Name | : Pattani |
| Village | : |
| Taluk | : |
| Calling | : |
| Age | : 64 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 10.09.2025.

**<u>முதல் விசாரணை:</u>**

நான் கடந்த 30.06.2022 ம் தேதி தாழ்ம்பூர் காவல்நிலையத்தில் உதவி ஆய்வாளராக இருந்து ஒய்வு பெற்றேன். நான் 05.10.2015ம் தேதியன்று 19.00 மணிக்கு மறைமலைநகர் காவல்நிலையத்தில் காவல் சிறப்பு உதவி ஆய்வாளராக பொறுப்பில் இருந்தபோது, திரு. ஏழுமலை என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகாரினை பெற்று, நிலைய குற்ற எண்.853/2015 இதச பிரிவு 279,337 கீழ் வழக்கு பதிவு செய்தேன். முதல் தகவல் அறிக்கை **அதசா.ஆ2 ஆக குறியீடு** செய்யப்படுகிறது. அன்றைய தினமே, சம்பவ இடத்தை சாட்சிகள் கார்த்திக் மற்றும் சுரேஷ் ஆகியோர் முன்னிலையில் பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். அந்த பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் முறையே **அதசா.ஆ3 மற்றும் அதசா.ஆ4** ஆக குறியீடு செய்யப்படுகிறது. சம்பவ இடத்தில் சாட்சிகள் ஏழுமலை, இப்ராகிம், அனிபா, ஆகியோர்களை விசாரித்து தனித்தனியே வாக்குமூலம் பதிவு செய்தேன். இவ்வழக்கில் காயப்பட்ட நபரான ஜெயசந்திரன் 16.10.2015ம் தேதி 3.10 மணியளவில் சிகிச்சை பலனின்றி இறந்துவிட்டதாக கிடைத்த தகவலின் பேரில் இவ்வழக்கின் சட்ட பிரிவை 279,304(ஏ) இதச வாக பிரிவு மாற்றம் செய்தேன். அந்த பிரிவு மாற்ற அறிக்கை **அதசா.ஆ5 ஆக** குறியீடு செய்யப்படுகிறது. வழக்கின் தன்மை கருதி, வழக்கின் கோப்புகளை காவல் ஆய்வாளரர் இளங்கோவன் வசம் ஒப்படைத்தேன். அவர் என்னை விசாரணை செய்தார்.

**குறுக்கு விசாரணை:**

விபத்து எத்தனை மணிக்கு நடந்தது என்றால் 05.10.2015ம் தேதி காலை 9.30 மணியளவில் நடந்தது. எத்தனை மணிக்கு புகார் பெறப்பட்டது என்றால் அன்றைய தினமே மாலை 7 மணியளவில் பதிவு செய்யப்பட்டது. கால தாமதமாக ஏன் புகார் கொடுக்கப்பட்டது என்று புகாரில் சொல்லப்பட்டுள்ளதா என்றால் இல்லை. முதல் தகவல் அறிக்கையில் கால தாமதத்திற்கான காரணத்தை சொல்லி இருக்கிறேனா என்றால் வாதியால் கால தாமதம் என்று சொல்லி இருக்கிறேன். புகார் வாங்கியவுடன் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேனா என்றால் சரிதான். புகாரை பெற்றவுடன் எந்த விசாரணையும் செய்யாமல் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்திருந்தால் அது செல்லத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் சம்பவ இடத்தில் தயார் செய்யாமல் காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்தேன் என்றால் சரியல்ல. முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தவுடன் எப்போது நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்டது என்றால் 06.10.2015ம் தேதி நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்டது. 3 நாள் கால தாமதமாக தான் நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்டது என்றால் சரியல்ல. எதிரிக்கும், இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றாலும் இழப்பீடு பெறுவதற்காக பொய்யான புகார் பெற்று, தவறாக வழக்கு பதிவு செய்துள்ளேன் என்றாலும் சரியல்ல.

Typewritten to my dictation in open
court read over to the witness in Tamil
in the presence of the accused and
admitted by the witness to be correct.

sd/-S.Sahaana
Judicial Magistrate No.II,
Chengalpattu.